ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

# பாதபந்தக் கட்டடக்கலையமைப்பில் சிவகாஞ்சி சிவாலயம்

சே.அருண்குமார்
தமிழாசிரியர், பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி,
காஞ்சிபுரம்-631 552.

68

**ஆய்வு நோக்கம்**

தமிழகக் கோவில் கட்டடக்கலையினில் மிக இன்றியமையா பங்காற்றியவர்கள் பல்லவர்கள். பல்லவர் கால கட்டடக்கலை அமைப்பானது குடைவரை, ஒற்றைக்கல்ரதம், கற்றளி என காணலாம். கற்றளி அமைக்கும் கட்டடக்கலையமைப்பில் பாதபந்த அதிட்டான முறையினில் அமைக்கப்பட்டுள்ள சிவாலயங்களின் கட்டடக்கலையின் ஒப்புமை மற்றும் சிற்ப அமைதியினை ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வுச்சுருக்கம்**

காஞ்சி நகரினைத் தலைநகராகக் கொண்டு தொண்டை மண்டலத்தை ஆட்சி புரிந்த பேரரசு பல்லவபேரரசு. கலைகளிலும் தங்களின் ஆட்சி சிறப்பினை வெளிபடுத்தியுள்ளனர். பல்லவர் கோவில் கட்டடக்கலையினில் பாதபந்த அதிட்டானத்துடன் அமைத்துள்ள பிறவாதீசுவரர், இறவாதீசுவரர், முத்தீசுவரர், மதங்கீசுவரர் ஆகிய சைவ சமய கோவில்களின் பாதபந்தஅதிட்டானத்துடன் அமைந்துள்ள கட்டடக்கலை, புடைப்புச்சிற்பம், தூண் மற்றும் விமான அமைப்பு ஆகியவற்றை கட்டடக்கலைநோக்கில் ஆய்வது இவ்வாய்வின் கருதுகோளாகும்.

**திறவுச்சொற்கள்**

பாதகட்டு (பாதபந்த அதிட்டானம்)

சிம்மத்தூண்

புடைப்புச்சிற்பம்

விமானம்.

**முன்னுரை**

காஞ்சிபுரம்சிவகாஞ்சி, விஷ்ணுகாஞ்சி, சமணகாஞ்சி, பௌத்தகாஞ்சி எனபல்வேறு சமயங்களுடன் சிறப்புடன் விளங்கிய நகரமாக திகழ்கின்றது. இந்நகரில் பல்லவ, சோழ, நாயக்கர் கால கட்டடக்கலையானது மிகவும் சிறப்பாக அமைந்துள்ளன. அவற்றில் பல்லவர் கால கட்டடக்கலையில் கற்றளி கோவில்களில் பாதபந்த அதிட்டானத்துடன் அமைக்கப்பட்டுள்ள கோவில்களைப்பற்றி காணவிருக்கின்றோம்.

**பாதகட்டு முறையிலான சிவாலயங்கள்**

**பிறவாத்தானம்**

காஞ்சிபுரம் புதிய இரயில் நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ள இக்கோவில் பல்லவர்

காலத்தில் அமைக்கப்பட்ட கோவிலாகும். கோவிலின் தல வரலாற்றினை 'காஞ்சிபுராணத்தில்' 'பிறவாத்தானப்படலம்'என்ற படலம்விவரிக்கின்றது.

கோவில் மேற்கு நோக்கிய வாயிலுடன், பாதபந்த அதிட்டானத்துடன் கருவறை மற்றும் அர்த்தமண்டபத்துடன் அமைந்துள்ளது.

**இறவாத்ததானம்கோவில்**

காஞ்சிபுரம் புதிய இரயில் நிலையத்திற்கு அண்மையில் பிறவாத்தானம் கோவிலுக்கு எதிரில் அமைந்துள்ளது. கோவில் தல வரலாற்றினை 'காஞ்சிபுராணத்தில்' 'இறவாத்தானப்படலம்' என்ற படலம் விவரிக்கின்றது.

கோவில் கிழக்கு நோக்கிய வாயிலுடன், பாதபந்த அதிட்டான முறையில் அமைக்கப்பட்டுள்ள கோவிலாகும். பலிபீடம், நந்திமண்டபம், முகமண்டபம், அர்த்தமண்டபம், கருவறையுடன் அமைந்துள்ள கோவிலாக விளங்குகின்றன.

**முத்தீசுவரர்கோவில்**

மேற்கு நோக்கிய வாயிலுடன் அமைந்துள்ள இவ்வாலயம் காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திலிருந்துபூக்கடைச்சத்திரம் சொல்லும் சாலையினில் அமைந்துள்ளது. பலிபீடம், நந்திமண்டபம், முகமண்டபம், அர்த்தமண்டபம், கருவறையுடன் பல்லவர் கால கட்டடக்கலையமைப்பில் பாதபந்த அதிட்டானத்துடன் அமைக்கப்பட்ட கோவிலாகும்.

**மதங்கீசுவரர்கோவில்**

காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திற்கு அண்மையில் நகரத்தின் கட்டடங்களின் மறைவினில் பல்லவர்களின் கலைத்திறனை மறைக்காமல் வெளிப்படுத்தும் கம்பீரமான கோவிலாக உள்ளது. மேற்கு நோக்கிய வாயிலுடன் பலிபீடம், நந்தி, முகமண்டபம், அர்த்த மண்டபம், கருவறையுடன் பல்லவ கால கட்டடக்கலையினில் பாதபந்த அதிட்டானத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

**பாதபந்த அதிட்டானம்**

கோவில் உறுப்புகளில் முதல் உறுப்பாக அமைவது அதிட்டானம், 18 வகையான அதிட்டானத்தை "மானசாரம்" என்னும் கட்டடக்கலை நூல் குறிப்பிடுகிறது,

பாதகட்டு அல்லது பாதபந்த முறை எனப்படும். இவ்வகையான கட்டடக்கலையானது தரையிலிருந்து சில அடி உயரம் கொண்டதாகஅதிட்டானம் அமைகின்றன. அதிட்டானத்தின் மீது கருவறை, அர்த்தமண்டபம், முகமண்டபம், அமைக்கப்படுகின்றன. தரைதளத்தில் இருந்து முகமண்டபம் வழியே அர்த்தமண்டபத்திற்கும், கருவறைக்கும் செல்ல முகமண்டபத்தின் நுழைவுவாயிலில் படிகட்டுகள் அமைக்கப்படுகின்றன. பாதபந்த அதிட்டானத்தின் மீது மண்டபமும், மண்டபத்தின் மீது விமானமும் அமைக்கபடும் கட்டடக்கலையாக திகழ்கின்றது.

ஆய்வு மேற்கொள்ளப்பட்ட நான்கு சைவ கோவில்களில் பாதபந்த அதிட்டானத்தில் அமைந்துள்ளஉறுப்புகளில் உபானம், பட்டிகை, வாசனம் கருங்கற்களாலும், ஜகதி, குமுதம், கண்டம்,

உபரிகம்பு போன்றவை மணற்பாறைகளால் அமைக்கப்பட்டுள்ளது.

இறவாத்தானம், பிறவாத்தானம், முத்தீசுவரர் கோவில்களில் பாதபந்தம் என்பது ஒரே தன்மையில் அமைந்துள்ளன. அவற்றின் அமைப்பிற்கு ஏற்ப சற்று நீள, அகலம் மட்டும் மாறுபடுகின்றன. இம்மூன்று கோவிலின் பாதபந்த அமைப்பைப் போன்றே மதங்கீசுவரர் கோவிலிலும் அமைந்துள்ளது பாதபந்த அதிட்டானம். ஆயினும் பாதபந்தத்தில் நான்கு மூலைகளிலும் யானை உருவ சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளது. யானை சிற்பம் கோவிலைத் தாங்குவது போன்று அமைக்கப்பட்டுள்ளது. பாதபந்த அதிட்டானத்துடன் அமைக்கப்பட்டுள்ளநான்குகோவில்களின் கட்டடக்கலையானது ஒன்றாகவே உள்ளது.இராஜசிம்மன் பாணியில் அமைக்கப்பட்டுள்ள இக்கோவில்கள் இராஜசிம்மனால் அமைக்கப்பட்டதாக கருதப்படுகின்றது.

**சிம்மத்தூண்**

முத்தீசுவர் கோவிலிலும், மதங்கீசுவரர் கோவிலிலும் முகமண்டபத்தில்நான்கு முழுசிம்மத்தூண்களும், நான்கு சிம்மத்துடன் அமைந்த அரைத்தூண்களும் காணப்படுள்ளது. இத்தூண்கள் பாதம், அமர்ந்த நிலையில் சிம்மம், மாலைத்தொங்கல், தாமரைக்கட்டு, கலசம்,கும்பம், பலகை வரிபோதிகையுடன் அமைந்துள்ளது. நான்கு பாதபந்த ஆலயங்களிலும் உடல்பகுதியின் (சுவர்) நான்கு மூலையிலும் பாயும் நிலையிலான சிம்மங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**புடைப்புச் சிற்பங்கள்**

முத்தேசுவரர் மற்றும் மதங்கீசுவரர் கோவில்களில் முகமண்டபத்தில் ஆறு சிற்பத்தொகுதி இடம் பெற்றுள்ளது, அவற்றில் வலபுறம் கைலைமலையினைத் தூக்கும் பத்துத்தலைராவணனும் மலையின் மீது சிவனும், உமையும் அமர்ந்த நிலையிலும், பூதகணங்களும் காட்சிப்படுத்தப்பட்டுகின்றன.

இரண்டாவதாக கஜசம்கார மூர்த்தியா கையில் ஆயுதங்களுடன் சிவபெருமான் கஜத்தின் மீது(யானை) ஒரு காலை வைத்துக்கொண்டு இருக்கும் கஜசம்கார மூர்த்தி சிற்பக்காட்சி அமைக்கப்பட்டுள்ளது.பகிரதனின் தவத்தால் ஆகாயத்திலிருந்து இறங்கிவரும்கங்கையைத் தன்னுடைய சடையினில் நிறுத்தி. சடாமுடியினிலிருந்து ஒரு முடியின் வழியாக பூமிக்கு கங்கையின் வேகத்தை குறைத்து அனுப்பிவைக்கும் கங்காதரரின் சிற்பம் காணப்படுகின்றது.

சிவபெருமான் தாண்டவம் புரிகின்ற இறைவனின் உருவமும் அவரின் அண்மையில் உமையம்மையும், பூதகணங்களும் அழகுடன் அமைந்த மற்றொரு புடைப்புச்சிற்பம் காணப்படுகின்றது.

கைலைமலையின் மீது சிவபெருமானும், உமையும், பூதகணங்களும் மலையின் கீழ் இராவணன் இறைவனை வழிபடும் காட்சியும் கவின்னுற அமைக்கப்பட்டுள்ளது.

நான்கு கோவில்களின் உடல் பகுதியில்(சுவர்) அமைந்துள்ள சிற்பங்களில் கொற்றவையின் சிற்பமும், சன்னவீரத்துடன் முருகனும் காட்சியளிக்கின்றார், தட்சணாமூர்த்தி, லிங்கோத்பவர்,திருமால், கங்காதரர், ஜலந்திர சம்கார மூர்த்தி, காலசம்காரமூர்த்தி, பிச்சாடனர், சண்டேச்வர அனுகிரக மூர்த்தி ஆகிய சிற்பங்கள் அமைந்ததுள்ளன. ஒரு சிற்பத்திற்கும் மற்றொரு சிற்பத்திற்கும் இடையினில்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

அரைத்தூண்கள் அமைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பங்களின் அமைதியானது நான்கு கோவில்களிலும் ஒன்றாகவே உள்ளது.நான்கு சிவன் கோவில்களிலும் பல்லவர் கால கோவில்களில் கருவறையில் காணக்கூடிய சோமஸ்கந்தர் உருவம் அமைந்துள்ளது.

**விமானம்**

உடல் பகுதியின் மீது அமைந்துள்ள அரைத்தூண்களுக்கு மேல் வரிப்போதிகையும், உத்திரமும் அமைக்கப்பட்டுள்ளன. தோள் உறுப்பினில் கர்ணக்கூடுகளும், கர்ணக்கூடுகளின் உள்ளே கந்தர்வர்களின் உருவம் அமைக்கப்பட்டுள்ளன. கபோதம், கண்டம், மகாநாசி, முடி என விமானம் அமைக்கப்பட்டுள்ளது. பிறவாத்தானம் கோவில் மட்டும் இரண்டு தளவரிசையுடனும், மற்ற மூன்று கோவில்களும் மூன்று தளவரிசையுடன் அமைக்ப்பட்டுள்ளன.

**முடிவுரை**

பல்லவர் கால கட்டடக்கலையினில் கற்றளிகள் மணற்பாறையினால் அமைக்கப்பட்டு தனிச்சிறப்புடன் திகழ்கின்றது. அத்தகைய கற்றளிகள் பாதபந்த அதிட்டான முடிறையினில் அமைக்கப்பட்டுள்ள கற்றளிகள் தனித்துவம் கொண்டது.

பாதபந்த அதிட்டான முறையில் அமைந்துள்ள சைவக்கோயில்கள் சிற்ப அமைதியும், கட்டடக்கலையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது ஒரே தன்மையில் அமைந்துள்ளன.

சிவகாஞ்சியிலுள்ள பாதபந்த கட்டக்கலையில் அமைக்கப்பட்டுள்ள இக்கோவில்களின் புடைப்புச்சிற்பங்களின் சிற்ப அமைப்பும், சிற்பங்கள் வெளிப்படுத்தும் புராணக்கதையும் ஒரே தன்மையில் அமைந்துள்ளது.

கோவில்களில் அமைக்கப்பட்டுள்ள சிம்மத்தூண்களும், விமான அமைப்பும் பல்லவர்கால கட்டக்கலையின் தனித்துவத்தை வெளிப்படுத்துகின்றன.

பல்லவர் கால கற்றளிகளில் பாதபந்த அதிட்டானத்துடன் அமைந்துள்ள சிவகாஞ்சி சிவாலயங்கள் கட்டடக்கலையில் தனிச்சிறப்புடன் அமைக்கப்பட்டுள்ளன என்பதே இவ்வாய்வின் முடிபாகும்.

**துணை நூற்பட்டியல்**

1. தமிழகக் கோயிற் கலைகள் – முனைவர் இரா. நாகசாமி
2. காஞ்சிபுராணம் - சிவஞானமுனிவர்
3. கோயில் ஆய்வுகளும் நெறிமுறைகளும் – டாக்டர் அம்பை மணிவண்ணன்
4. தமிழகக் கோவில் வரலாறு - டாக்டர்அம்பை மணிவண்ணன்
5. தமிழ்நாட்டு கோயிற் கட்டடக்கலை – அ. ராகவன்
6. தமிழகக் கோயிற் கட்டடக்கலைமரபு – முனைவர்இராசு. பவுண்துரை
7. தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் – மயிலைசீனி. வேங்கடசாமி